DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No: 153/2022

Deposition of Witness : PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜேந்திர பிரசாத் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2024.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**3 வது எ.ம.கு.வி.:**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | மனு விபத்தானது கடந்த 03.04.2022 அன்று நடந்தது என்றால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | உங்கள் சம்பந்தமாக வருமான வரி கணக்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தது சம்பந்தமாக ஆவணங்கள் உள்ளதா? |
| பதில் | : | இல்லை |
| கேள்வி | : | சம்பவம் இடம் தேனி ஆண்டிப்பட்டி பிரதான சாலை என்றால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | நீங்கள் இருசக்கர வாகனத்தின் பின் அமர்ந்து சென்றீர்கள் என்றால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | நீங்கள் வாகனத்தின் பின்புறம் அமர்ந்து சென்றீர் என்றால் ? |

| | | |
|---|---|---|
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | மேற்படி இருவரும் அந்த சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | புகாரில் ெஹல்மெட் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | விபத்து நடந்த இடம் பிரதான சாலையில் இருந்து பிரிந்து செல்லக்கூடிய பகுதி என்றால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | மேற்படி சந்திப்பின் அருகில் வாகனத்தை ஓட்டியவர் திருப்பிய போது விபத்து நடந்தது என்று சொன்னால்? |
| பதில் | : | சரியல்ல. சிறுது துாரம் சென்ற பின் நடந்தது. |
| கேள்வி | : | நீங்கள் சென்ற வாகனத்தை ஓட்டிய வாகனத்தின் முன்பகுதி விளக்கு கண்ணாடி மற்றும் முன்சக்கரம் ஆகியவை சேதம் அடைந்து இருந்ததாக வாகன விபத்து அறிக்கையில் சொல்லப்பட்டது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | விபத்தில் சொல்லப்பட்ட காரில் வலது பக்கம் பகுதி சேதம் அடைந்து இருப்பதால் விபத்து உங்கள் கணவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால்? |
| பதில் | : | நான் பார்க்கவில்லை |
| கேள்வி | : | விபத்து சமயத்தில் உங்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை என்றாலும் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்கப்பட்ட இழப்பீடுகள் கொடுக்கப்பட வேண்டியது இல்லை என்றாலும்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | கார் ஓட்டுநர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற வழக்கில் எதிர்வாதம் செய்யப்பட்டது என்றால்? |
| பதில் | : | எனக்கு தெரியாது |
| கேள்வி | : | நீங்கள் சென்ற வாகனத்தை ஓட்டிவரின் கவனக்குறைவால் மனு விபத்து நடந்ததால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் கொடுக்க வேண்டியவர் அல்ல என்றாலும் ஒருவேளை விபத்து சமயத்தில் நீங்கள் தலைக்கவசம் அணிந்திருந்தால் காயங்கள் ஏற்பட வாய்பில்லை அல்லது தவிர்த்து இருக்கலாம் என்றால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | நீங்கள் தாக்கல் செய்த மருத்துவ ஆவணங்களுக்கு மருத்துவரின் பரிந்துரை கடிதம் உள்ளதா என்றால்? |
| பதில் | | உள்ளது. |

மறு விசாரணை - இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.03.2024 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.03.19 18:33:21 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.**

19.03.2024.